Pandian Journal of Women's Studies
Peer-Reviewed Journal
பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்
மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X



# Kambar's Creation of Royal Female Personage

**Dr. J. G. Joni Jebamalar**, Assistant Professor, Head of Tamil Department,
Muslim Arts College, Thiruvithancode. Tamil Nadu, India.
ORCiD: https://orcid.org/0009-0007-4866-5537
DOI: 10.5281/zenodo.14752834

## Abstract

*The poet must give a shape to all the characters found in the epic and structure it properly. If the characterization in the epic is to be done in the best way, it will be clear if the poet becomes a person living in the society or a character and makes them speak or speak, rather than thinking of it as a mere character created in the poet's mind. In short, he should become the lifeblood of the character that the poet creates. There should be no change in this, whether it is a minor character or the hero of the epic. Even if the poet is a man, it is difficult to create an epic by understanding the mental state of the king and the mentality of the peasant. Whoever succeeds in this, can earn the title of the best poet and establish himself among the people. Kambar is such a majestic poet who crafted his epic Ramayana with great dignity. His depiction of royal women is excellent. This article ponders over the creation of royal women characters in the epic Ramayana.*

**Keywords:** Kambar, Kosalai, Seethai, Kaigeyi, Subathirai, Kooni.

## References

[1] Ramanan, M. K. Kaviyam Kanda Nayakiyar. Poonkodi Pathippakam, Chennai, 2008.
[2] Ramasubramaniam, V. *KambaninSattamum Neethiyum*. Vanathi Publishing House, Chennai, 1992.
[3] Ramasubramaniam, V.T. *Urainadaiyil Kambanamayanam.* Thirumagal Publishing House, Chennai, 2006.
[4] Iyer. V.V.S. (in English), Suresh, D.R. (in Tamil). *Kambanamayanam – Oor Aaivu*. Sandhya Publishing House, Chennai, 2023.
[5] Sinivasan, I. *Kambanamayanam*. Saran Books, Chennai, 2002.
[6] Gnanasambandhan, A. S. *Kamban Puthiya Paarvai*. Kaura Publishing House, Chennai, 2007.
[7] Manikkam. *Kambar*. Meyyappan Pathippagam, Chidambaram, 1990.

**Author Contribution Statement:** NIL
**Author Acknowledgement:** Nil
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.
The content of the article is licensed under **Creative Commons Attribution4.0** International License.

Pandian Journal of Women's Studies
*Peer-Reviewed Journal*

*பாண்டியன் மகளிர் ஆய்வு இதழ்*
*மதிப்பாய்வு செய்யப்படும் இதழ்*
Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

# கம்பனின் அரசகுல பெண் பாத்திரப் படைப்பு

**முனைவர் ஜா. ஞா. ஜோணி ஜெபமலர்**, உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறைத் தலைவர்,
முஸ்லிம் கலைக்கல்லூரி, திருவிதாங்கோடு, தமிழ்நாடு, இந்தியா.
ORCiD: https://orcid.org/0009-0007-4866-5537
DOI: 10.5281/zenodo.14752834

**ஆய்வுச்சுருக்கம்**

*ஒரு படைப்பின் சிறப்புக்கு முக்கிய அடிப்படையாக பாத்திரப் படைப்பு அமைகிறது. பாத்திரப் படைப்பென்பது ஏதோ ஒரு தேவை கருதி படைப்பாளர் பயன்படுத்தி கொள்கின்ற ஒன்றல்ல. அது அவருடைய முழுமையான வெளிப்பாட்டாகும். கம்பராமாயணத்தில் பல இனங்களை சார்ந்த பெண் பாத்திரப் படைப்புகளுடன் பல தரம் வாய்ந்த பாத்திரங்கள் காணப்படுகின்றது. சிறுபாத்திரமானாலும் பெரும்பாத்திரமானாலும் அதற்குரிய சிறப்பினை கொடுத்து மக்கள் மனதில் நிலைபெற வைப்பதில் கம்பரின் ஆளுமை இதில் நுட்பமாக வெளிப்படுகிறது.*

**குறிப்புச்சொற்கள்:** கம்பர், கோசலை, சீதை, கைகேயி, சுபத்திரை, கூனி.

**முன்னுரை**

கவிபுனையும் கம்பரிடம் தமிழ்சொற்கள் ஓடிவந்து என்னையும் கவிதையில் சேர்த்துவிடு என்று கெஞ்சுமாம். கம்பரின் கவிதையின் தன்மையைசொல்ல இந்த வழக்காற்றைக் கூறுவது வழக்கம். அவரின் படைப்பில் பெண் கதாபாத்திரங்கள் குறித்து இக்கட்டுரையில் காண்போம்.

**கம்பராமாயணத்தில் பெண்பாத்திரப் படைப்பு**

காப்பியத்தில் காணப்படும் அனைத்து பாத்திரங்களுக்கும் ஒரு வடிவினை தந்து அதனை முறையாகக் கட்டமைத்துச் செல்வது கவிஞரின் கடமையாகும். காப்பியத்தில் பாத்திரப்படைப்பு சிறந்த முறையில் அமைய வேண்டுமானால் கவிஞரின் எண்ணத்தில் உருவான பாத்திரம் என எண்ணாமல் சமூகத்தில் வாழும் ஒருவராக அல்லது கவிஞரோ அப்பாத்திரமாக மாறிப் பேச வைப்பாராயின் அல்லது பேசுவராயின் தெளிவுறும். சுருங்கக் கூறினால் கவிஞர் வடிக்கும் பாத்திரத்தின் உயிர்நாடியாக அவர் மாற வேண்டும். இதில் சிறிய பாத்திரமாயினும் காப்பியத் தலைவனாயினும் மாற்றம் இருக்கக்கூடாது. கவிஞர் ஆணாகயிருப்பினும் அரசனின் மன நிலையினையும், குடியானவனின் மனநிலையினையும் உணர்ந்து காப்பியம் படைத்தல் கடினமாகும். இதில் எவர் ஒருவர் வெற்றி கொள்கின்றாரோ அவரே சிறந்த கவிஞர் என்ற பட்டத்தை மக்களிடம் பெற்று நிலைபெற முடியும். இவ்வாறு ஆண் கவிஞர்கள் பலதரப்பட்ட ஆண்களின் உணர்வுகளை அறிந்து காப்பியம் இயற்றுதல் கடினம் எனும்பொழுது பெண்களின்றி காப்பியம் இயற்ற முடியாத நிலையில் கவிஞரின் நிலை

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

சோதனைக்குரியதாகக் காணப்படுகிறது. எனவே ஒரு கவிஞன் சாதாரண மனிதன் காணாததையும் தன் மனக்கண்ணால் கண்டு உணர்பவனாக இருத்தல் வேண்டும்.

**அரசகுலப் பெண்பாத்திரப் படைப்பு**

கம்பர் காப்பியத்தை அழகும், வைப்பும் ஒருங்கே அமையப்பெற்று அயோத்தி மாநகரில் தொடங்கியுள்ளார். இந்நிலை மெல்ல வளர்ந்து பல நிலைகளை அடைந்ததுடன் பல இனத்தாரையும் கண்டு இறுதியாக இவ்வயோத்தியிலேயே முடிவடையச் செய்துள்ளார். இவ்வாறு பரந்து விரிந்த பரப்பினைக் கொண்ட காப்பியத்தினை பாத்திரப்படைப்பில் அரசர் குலப்பெண் பாத்திரங்கள் முக்கியத்துவம் வாய்க்கப்பெற்றவர்கள் ஆவர். கோசலை, கைகேயி, சுமித்திரை, சீதை, நீலமாலை, கூனி, ஊர்மிளா, சுருதகீர்த்தி, மாண்டவி போன்ற அரசக்குல பெண் பாத்திரப்படைப்புகளை அறிமுகப்படுத்தி காப்பியத்திற்கு கம்பர் வளம் சேர்த்துள்ளார் எனலாம்.

**கோசலை**

நதி நீரானாலும், ஆற்று நீரானாலும் அதனை தள்ளாது ஏற்றி நிற்கும் கடலின் ஆழத்தைப் போன்று பொறுமையும் பரந்த உள்ளமும் கொண்டவளாக கோசலை படைக்கப்பட்டுள்ளாள். தசரதனின் தேவியர்களுக்கு கோசலை மூத்தவள். இராமனை ஈன்ற பெரும் பேறு உடையவள்.

> **மலைபோல் அடுக்கி வரினும் துயரத்தைக்கண்டு அஞ்சியோடாமலும் அதன்பொருட்டுப் பிறர் காரணம் உள்ள பொழுது, இல்லாத பொழுதும் நொந்து கொள்ளாமல் தன் கடமையை விடாது செய்யும் பெருமாட்டியாகவே கோசலை காணப்படுகிறாள்" (அ. ச. ஞானசம்பந்தர் ப. 121)**

என்று அ.ச. ஞானசம்பந்தன் கூறியதன் வழி கோசலை பாத்திரப்படைப்பின் தன்மையை அறிய முடிகிறது.

> **மாமுனி அருள்வழி மன்னர் மன்னவன்**
> **நூழமென் கரிகுழல் தொண்டைத் தூயவாய்க்**
> **காமரு கோசலை கரத்தில் ஓர்பகிர்**
> **தாம்உற அளித்தனன், சங்கம் அர்த்துஎழு (கம்பராமாயணம். பா. 267)**

என்று குழந்தைப்பேறு கருதி நடந்தப்பெற்ற யாகத்தினால் கிடைத்த அமுதத்தினை தசரதன் கோசலைக்கு கொடுத்த காட்சியின் வழியாக கம்பர் காப்பியத்தில் கோசலையை அறிமுகம் செய்கிறார்.

**கைகேயி**

காப்பிய போக்கிற்கு துணையாகி தலைமை எதிர்மை மாந்தர்க்கு உறுதுணையாகி பல்சுவைச் செயல்பாட்டிற்குக் காரணமாகி, திருப்பங்கு கால்கோள் இட்டு, மாற்றங்களுக்கு பாதை வகுத்து, வளர்ச்சி வீழ்ச்சிகளுக்கு வழிவிட்டு அமையும் பாத்திரங்கள் துணைமை

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

பாத்திரங்கள் எனக் கூறுவர். கைகேயி என்ற கதாபாத்திரத்தின் வழியாக கம்பர் கதையை நகர்த்திச் செல்கிறார். கைகேயினை கம்பர் தெய்வக் கற்பினாள் ஆழ்ந்தப்பேர் அன்பினாள் என புகழ்ந்தும் பின்னர் நாகம் என்னும் கொடியாள், தீயவையாயினும் சிறந்த தீயாள் என இகழ்ந்தும் காப்பியத்தில் படைத்துள்ளார். இவளை

**கைகயன் தனையை தன்கரத்தும், அம்முறைச்**
**செய்கையின் அளித்தனன், தேவர் ஆர்த்துஎழ்**
**பொய்கையும் நதிகளும் பொழிலும், ஓதிமம்**
**வைகுறு கோசல மன்னர் மன்னனே (கம்பராமாயணம். பா. 268)**

என்னும் பாடல் வரிகள் வழியாக அறிமுகம் செய்துள்ளார்.

**கம்பன் கட்டிய கலைக்கோவிலில் ஓர் இன்றியமையாத பாத்திரமாவாள் கைகேயி. அவளாலேதான் இராம கதை நடைபெறுகிறது. இராமன் உலகில் தோன்றிய பயன் விளைய, அவள் ஒருத்தியே காரணமாகிறாள் (வ. சுப. மாணிக்கம். ப. 128)**

என்பதற்கு ஏற்ப கம்பர் கைகேயினைப் படைத்துள்ளார்.

**சுமத்திரை**

கம்பர் தன் காப்பியத்தில் ஒரு சில பாத்திரங்கள் பால காண்டம் தொடங்கி இறுதிவரை இடம்பெற்றுள்ளன. சில பாத்திரங்கள் சில காண்டங்களில் அதிலும் சிற்சில பகுதிகளில் மட்டுமே காட்சியளிக்கின்றன. அவ்வகையில் மிக சிறிய பங்கை ஏற்று படிப்போர் உள்ளத்தில் நிலைத்த இடத்தினைப் பெற்ற பாத்திரங்களுள் இளைய மென்கொடி என்று புகழப்படும் சுமித்திரை பாத்திரமும் ஒன்றாகும். யாகத்தில் பெறப்பட்ட அமுதத்தினை கைகேயிக்கு கொடுத்த பின்னர் மீதமுள்ள அனைத்தையும் சுமித்திரைக்கு இருமுறை கொடுக்கிற பொழுது அறிமுகம் செய்கிறார் கம்பர்.

**நமித்திரர் நடுக்குறு நலம்கொன் மெய்ப்புடை**
**நிமித்திரு மரபுனாள், முன்னர் நீர்மையின்**
**சுமித்திரைக்கு அளித்தனள். கூராக்கு வேந்துஇனிச்**
**சமித்ததுஎன்; பகைஎன தமரொடு ஆர்ப்பவே (கம்பராமாயணம். பா. 269)**

என்ற பாடல் விளக்குகிறது. சுமித்திரை அதிகப் பாடலில் இடம்பெறாததால் இவரின் சிறப்பு குன்றியது எனக் கூறுவதற்கு இல்லை. கோசலையின் நிழலாகக் காணப்படும் இவளை கம்பர், ஒருமுறை மட்டும் காப்பியத்தில் பேசவைத்துள்ளார். அவளது பேச்சிலேயே பண்பு நலன்கள் அனைத்தும் குறிப்பிட்டுள்ளார்.

***சீதை***

மிதிலை நகர் மண்ணில் ஏர் முனையில் கண்டெடுக்கப்பட்டதால் சீதை என்ற பெயரையும் மிதிலை நகர் செல்வியாகையால் மைதிலி என்ற பெயரையும், சனகன் எடுத்து வளர்த்ததால் சானகி என்ற பெயரையும் பெற்ற இவள், திருமகளின் அவதாரமாகப் பூமியில்

**Volume 5, Special Issue 1 (2), January 2025** **E-ISSN: 2583-715X**

பிறந்தாலும் புடம் போட்ட தங்கமாகக் கற்பின் கனலியாகக் கம்பரால் படைக்கப்பட்டிருக்கிறாள்.

> **காலத்தாலும் கற்பாலும் அழகாலும் அனைத்தாலும் மனித சமுதாயப் பெண் வரலாற்றிற்கு முன்னுதாரணமாகவும் முதல் உதாரணமாகவும் நிற்பது சீதாதேவியை தான் (மா. கி. இரமணன். ப. 5)**

என்பர் மா.சி.இரமணன் அவர்கள் கூறுகிறார்கள். இராமனும், இலக்குவனும், முனிவனும் மிதிலைக்கு செல்லும் வழியில் இராமனுக்கு அறிமுகமானாள் சீதை. அங்கு இருவரின் கண்ணும் கலந்து காதல் மலர்கிறது. இராமன் வில்லை ஒடித்ததால் திருமணம் நடைபெறுகிறது. இவ்வாறு மிதிலையின் சீதை, இராம காதை நிகழ இராமனின் துணையாக மாறுகிறாள். அவளின் பண்பு நலத்தினை தெரியப்படுத்த முடிசூட்டு விழாவில் நடைபெறாத இருக்கும்போது அவர் வருத்தப்படவில்லை, இராமன் தன்னை விட்டு வனவாசம் செல்கிறான் என்பது தெரிந்து துன்பப்படுகிறாள். இராவணனைக் கொன்றபிறகு இராமனால் மீட்கப்பட்டு சந்தேகத்திற்கு ஆளாகி தீக்குளித்து கற்பின் தீண்மையையும் பொருண்மையையும் இராமனுக்கும் உலகிற்கும் நிறுவினாள். பின்னர் அவளை ஏற்ற இராமன், அயோத்திக்கு அழைத்துச் சென்று பட்டத்தரசியாக்குகிறார்.

**கூனி**

கம்பராமாயணத்தில் எல்லையில்லா சிறப்புக்கும் நாளும் வளரும் மேன்மைக்கும் அடித்தளமானவள் மந்தாரையாவாள். மக்கள் உள்ளத்தில் கம்பராமாயணம் பெற்றுள்ள ஒப்புயர்வற்ற இடத்திற்கும் காரணமாயிருப்பவள் அனைவரின் வசைமொழிக்கும் வெறுப்புக்கும் பாத்திரமானவள். அறிமுகம் செய்யும்போது கம்பர் கொடுமனக்கூனி தோன்றினாள் என்று குறிப்பிட்டுள்ளார். இராமன் மீது அளவற்ற அன்புக் கொண்ட கைகேயின் மனதை இராமன் மீது கொண்ட பகையுணர்வால் கூனி கெடுக்க எண்ணினாள். அதன் முதற்கட்டமாக, கைகேயின் மனதில் பொறாமை பொங்க வேண்டும் என்ற திட்டத்தின்படி பேசியவள் தோன்றினாள். அது பயன்தராதுபோகவே கைகேயி பரதன் இருவர் மீது தான் வைத்துள்ள அன்பினை பெரிதாக்கிக் கூறி, இராமன் அரியணையேறினால் பரதன் வருத்தமுறுவான் என நம்பும்படி பேசி கைகேயின் மனதை மாற்றி வெற்றி கொண்டாள். கூனியின் கதாபாத்திரம் சிறிதாக இருந்தாலும், ஆளுமை மிக்க பாத்திரமாக மாற்றியுள்ளார் கம்பர்.

**முடிவுரை**

இலக்கியம் காலத்தை வென்று வாழ்வதற்கு காரணம் அதன் கவிதைப் பண்பு என்று கூறுவர். கம்பராமாயணம் காலம் கடந்து வாழ்வதற்கு கதை மட்டும் காரணம் அன்று. கதை சொல்லல் முறை, காட்சியமைப்பு, கதாபாத்திரப்படைப்பு போன்றவை முக்கியமாக

Volume 5, Special Issue 1 (2), January 2025 E-ISSN: 2583-715X

அமைகின்றன. அதிலும் பெண் கதாபாத்திரங்களை கம்பர் படைத்துள்ள தன்மையை இக்கட்டுரை ஆராய்கிறது.

### குறிப்புகள்

[1] இரமணன், மா.கி. *காவியம் கண்ட நாயகியர்.* பூங்கொடி பதிப்பகம், சென்னை, 2008.
[2] இராமசுப்பிரமணியம், வெ. *கம்பனின் சட்டமும் நீதியும்.* வானதி பதிப்பகம், சென்னை. 1992.
[3] இராமசுப்ரமணியம், வ. த. *உரைநடையில் கம்பராமயணம்.* திருமகள் பதிப்பகம், சென்னை, 2006.
[4] ஐயர். வ, வே, சு.( ஆங்கில மூலம்), சுரேஷ், டி,ஆர். (தமிழில்). *கம்பராமயணம் - ஓர் ஆய்வு.* சந்தியா பதிப்பகம், சென்னை, 2023.
[5] சீனிவாசன், இரா. *கம்பராமாயணம்.* சரண் புக்ஸ், சென்னை, 2002.
[6] ஞானசம்பந்தன், அ. ச. *அரசியர் மூவர்.* கங்கை புத்தகநிலையம், சென்னை, 2001.
[7] ஞானசம்பந்தன், அ.ச. *கம்பன் புதிய பார்வை.* கௌரா பதிப்பகம், சென்னை, 2007.
[8] மாணிக்கம், வ.சுப. *கம்பர்.* மெய்யப்பன் பதிப்பகம், சிதம்பரம், 1990.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை என்று உறுதிமொழி அளிக்கிறேன்.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons. org/licenses/by/4. 0/ கீழ் பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.